நல்லூர் ... யாழ்ப்பாணம்

# இனப்பிரச்னை விடயத்தில் ஜப்பான் ஆழ்ந்த கவனம்

(டோக்கியோ)

இலங்கையின் இனப்பிரச்னை குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துவதாக ஜப்பான் தெரிவித்துள்ளது. இனப்பிரச்னை விரைவில் தீர்ந்ததும் இலங்கைக்கு கூடு

(3ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 2 இதழ் 89
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15 — 05 1993


## இந்திய ஜனாதிபதியின் இலங்கை விஜயம் ரத்து

(புதுடில்லி)

இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா இலங்கைக்கு விஜயம் செய்யும் தமது திட்டத்தை ரத்துச்செய்துள்ளார். அடுத்த மாதம் 23ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை ஒப்படைக்க இந்தியா மீண்டும் கோரிக்கை

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு மீண்டும் இலங்கை அரசிடம்

(4ம் பக்கம் பார்க்க)

# பிரேமா ஆட்சி பற்றி எழுதிய ‘ஏசியாவீக்’ சஞ்சிகைக்கு தடை!

## தணிக்கையின்பின் விநியோகிக்க அரசு அனுமதி

(மணிலா)

‘ஏசியா வீக்’ சஞ்சிகையில் பயங்கரவாத ஆட்சி என்ற தலைப்பில் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா குறித்து மே 12 திகதியிட்ட அட்டைப்பட கட்டுரை ஒன்று வெளியாகியிருப்பதையடுத்து இந்த சஞ்சிகைகள் விநியோகம் செய்யப்படக்கூடாதென இலங்கை அரசு ‘ஏசியா வீக்’ மீது தடை விதித்துள்ளதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

இப்பத்திரிகையில் வெளியாகியுள்ள தகவல்களின்படி அரசியல் எதிரிகளைக் கொலை செய்ய பிரேமதாசா உத்தரவிட்டார் என கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரேமதாசா குறித்து ஐந்து பக்கங்களில் கொண்ட கட்டுரையை பாதுகாப்பு மற்றும் தகவல்துறையினர் தணிக்கை செய்த பிறகு பொதுமக்களின் விநியோகத்திற்கு வழங்கப்படுமென சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இக்கட்டுரையில், கத்தியை வைத்த ஆட்சி என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள பகுதி தான் சர்ச்சைக்குரிய ஒன்றாக உள்ளது என்றும் இலங்கையின் 2,500 ஆண்டு கால வரலாற்றில் பிரேமதாசாவின் நான்கு ஆண்டு கால ஆட்சியே வன்முறைகள் நிறைந்த ஆட்சியாக இருந்ததெனவும் ஹொங்கொங்கிலிருந்து வெளியாகும் ஏசியா வீக் தெரிவித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. ஐ. தே. மு. ஆதரவாளர்களான மாவத்தகம மக்களுக்கு ஆயுதகோஷ்டி அச்சுறுத்தல்

(கொழும்பு)

மாவத்தகம பகுதிக்கு நேற்று முன்தினம் இரவு நுழைந்த இனம் தெரியாத கோஷ்டி ஒன்று அப்பகுதியிலுள்ள ஐ. ஐ. தே. முன்னணிக்கு ஆதரவான மக்களை

(4-ம் பக்கம் பார்க்க)

## கைதான சந்தேகநபர் கனடா செல்லவிருந்தார்

(கொழும்பு)

லலித் அத்துலத்முதலியைக் கொலைசெய்ததாக சந்தேகிக்கப்படும் சந்தைய்ச இரகுநாதன் என்ற இளைஞர் இந்த கொலைச் சம்பவத்துக்கு இரு நாட்களுக்கு முன்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கொலைவிவகாரம்:

# பிரேமாவுடன் கொலையாளி பல தடவை சுற்றுலா வந்தார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா மேற்கொண்ட ஆறு தனிப்பட்ட விஜயங்களின் போது அவரைப் படுகொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் குலவீரசிங்கம் வீரகுமார் என்பவரும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாஸா கொலை தொடர்பாக பொலிசார் மேற்கொண்டுவரும் விசாரணைகளிலிருந்து இந்த விபரம்

(3-ம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினி மூலம் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் ரூபவாஹினி மூலம் தேர்தல் பிரசாரம் செய்ய அரசு அனுமதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய ராணுவம் படைகளில் சேர சலுகை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவத்தை அதிகரிக்கும் நோக்குடன் படையிலிருந்து தப்பியோடிய சிப்பாய்களை கண்டு பிடித்து மீண்டும் படைகளில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகளில் பொலிசாரும், இராணுவத்தினரும் மிகத்தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரைக்கும் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் தப்பியோடிவிட்டதாகவும் இவர்களில் சிலர் பொலிசாரினதும் இராணுவத்தினரதும் நடவடிக்கைகளை

(3-ம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை தேர்தலில் ஐ. தே. க. தோல்வியுற்றல் ஜனாதிபதி தேர்தலில் வன்முறை வெடிக்கும்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோல்வி அடைந்தால் அடுத்தவருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் பெரிய அளவிலான வன்முறைகள் இலங்கையில் தலைதூக்கக்கூடுமென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

(-4ம் பக்கம் பார்க்க

## இட்டுவுடன் வந்த 9 பேருக்கு எதிரான விசாரணைக்கு ஒத்துழைக்க இந்திய கடற்படை மறுப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்ததளபதி கேணல் கிட்டு பயணம் செய்த கப்பலில் இருந்து கைதுசெய்யப்பட்ட ஒன்பது சிப்பந்திகளுக்கும் எதிரான விசாரணைக்கு இந்திய கடற்படை ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருகிறது என்று இந்திய புலனாய்வுத் துறை

(3-ம் பக்கம் பார்க்க)

## தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை ஞாயிற்றுக்கிழமை 16ம் திகதி நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் காலை 9-00மணி தொடக்கம் 10-00மணிவரையும் மீட்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## உயர்நிலை அதிகாரிகள் பலரின் பதவிகள் திடீரென மாற்றம்

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி திரு டி. பி. விஜயதுங்கா பதவியேற்ற பின்பு உயர் பதவிகளை வகித்த பல அதிகாரிகள் திடீர் திடீரென மாற்றம் செய்யப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சுங்கப்பகுதி நாயகமாக நீண்டகாலமாக பணியாற்றி வந்த திரு. லலித் இங்கம,

(4-ம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காடு பகுதியில் துப்பாக்கிசூட்டு சத்தங்கள்

(தாளையடி)

கட்டைக்காடு வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய மண்டலாய் மாவிலங்கைத்தோட்டம் பகுதிகளில் நேற்று பகல் தொடர்ச்சியாக கடும் துப்பாக்கிச் சூட்டு சத்த

(3-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வல்லாரைக் குளிகை

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த GOTU-KOLA Capsules கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-4072)

### காணவில்லை

என்பீல்ட் (Enfield) நீரிறைக்கும் இயந்திரம் 1240471/ A K 1018784 7-5-93 வெள்ளிக்கிழமை தொடக்கம் காணவில்லை. கண்டவர்கள் தகவல் தரவும். ப. மகேந்திரதாசன் சங்குவேலி. (இ-100)

### எண்ணெய் முழுக்கு

இலைக்காய், வெந்தயம், பயறு, எலுமிச்சங் கோது மற்றும் உடலுக்கும் கேசத்திற்கும் நலம் தரும் மூலிகைப் பொருட்கள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவியுங்கள். பயனடையுங்கள். பக்கற் ஒன்றின் விலை ரூபா 3/- — "மில்க் வைற்". (எ.3128)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலைப்பிடி, தலைசாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-113)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## இராசி பலன்

15-05-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 02)

நவமி மு. இ. 11 18 வரை; சதயம் பி. ப. 1 55 வரை. சித்தயோகம் இராகுகாலம் காலை 8-53 முதல் 10-23 வரை; சுபநேரம் நண்பகல் 2-53 முதல் 4.23. வரை

மேடம்- நூதன விஷயங்களில் அக்கறை, குடும்ப சுகம், மன அமைதி.

இடபம்- தனலாபங்கள், உறவினர் சேர்க்கை, குதூகலம்.

மிதுனம்- மனோதுக்கம், பாவமான செயல், அலைச்சல்.

கடகம்- மக்கள் விரோதம், மனப்பயம், ஒதுங்கிப்போதல்.

சிம்மம்- பெரியோர் நேசம், குழந்தைப்பாசம், வெற்றி வாய்ப்பு.

கன்னி- உடல் பராக்கிரமம், முயற்சி பலிதம், சந்திப்பு.

துலாம்- வீண் செலவு, கடின வார்த்தை, தொழில் தகராறு.

விருச்சிகம்- மனச்சஞ்சலம், கெட்ட எண்ணங்கள், விரக்தி.

தனுசு- பயண அனுகூலம், நிலபுல லாபம், மனசௌக்கியம்.

மகரம்- மனைவியோடு முரண்பாடு, தொழில் நஷ்டம், விரோதம்,

கும்பம்- புண்ணிய காரியம், தொழில் சிறப்பு, கடமையுணர்வு.

மீனம்- உடல் பலவீனம், பிதா துன்பம், மனவேதனை.

— ஜோதிடர்

# இன்று

(கொழும்புத்துறை)

யாழ். கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு நடத்தும் 'உடையமைத்தல்' பாடநெறி, யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகிறது (154)

★

(யாழ்ப்பாணம்)

யாழ். திருச்சபை நற்செய்திக் கழகம் வழங்கும் திருமறைக் கண்காட்சி யாழ். வை. எம் சீ ஏ. மண்டபத்தில் இன்று 15-ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை நடைபெறும்.

★

(கொழும்புத்துறை)

தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வைகாசி மாதச் சங்கிராந்தி விழா இன்று 15 ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாட்டுடன் இடம்பெறும். (154)

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகினால் நடத்தப்படும் 'சுக வாழ்வு' பொது விரிவுரைத் தொடரின் 7வது அமர்வுக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகிக்கின்றார்.

வழமைபோல் இன்று சனிக்கிழமை, யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை இவ் விரிவுரைத் தொடர் இடம்பெறுகிறது.

வைத்திய கலாநிதி பொ. இராமநாதன் 'தமிழ் மருத்துவம் காட்டும் சுக வாழ்வு' என்ற தலைப்பிலும், வைத்திய கலாநிதி ஏ. வி. இராசரட்ணம் 'மாதர் நோயும், குழந்தை நோயும்' என்ற தலைப்பிலும் விரிவுரை நிகழ்த்துவிருக்கின்றனர். (சு)

★

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் மக்களின் ஆதரவுடன், நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3-00 மணி முதல் 6-00 மணி வரை திரு. வ தலராசா ஆசிரியர் தலைமையில் நடைபெறும் "சாளரம்" இதழ் கருத்து நிகழ்வில் கலந்துகொண்டு கடற்புலிகள் அரசியல் துறையினர் திரு. மறவன் சிறப்புரை ஆற்றுவார்.


### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையகம்

யாழ். கிளை மன்ற

## ஆண்டு பொதுக் கூட்டம்-1993

மேற்படி கூட்டம் 16-05-93 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9-00மணிக்கு யாழ். வேம்படி மகளிர்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். பிரிவுப் பிரதிநிதிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்,

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
14-05-93. (ஏ-3130)

## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

Tenders are invited for the following works from Contractors Registered for Civil Engineering works with University of Jaffna or ICTAD.

(a) Improvements to partially completed exam hall - Phase II

(b) Improvements to partially completed Maintenance Branch extention.

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 1993 05.18 to 1993.05.21 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fee for each tender.

(a) Refundable - Rs. 2000/-

(b) Non - Refundable - Rs. 200/-

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Perfected tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 1993 06.08 at 10.00 a. m.

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA.

P. O. BOX 57,
THIRUNELVELY,
JAFFNA. (A-3125)

# பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்
# Patrician Institutes

## அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சி நெறிகள்

அகில உலக கெயர் (CARE INTERNATIONAL) ஸ்தாபனத்துடன் இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ பயிற்சித் தகைமை:
15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்.
8ம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்.

★ பயிற்சிக் காலம்:
2½ மாதங்கள்

★ கொடுப்பனவுகள்:
ஸ்தாபனப் பயிற்சியின் போது (2½ மாதங்கள்) மாதம் 600/-ம்,
பயிலுனர் பயிற்சியின் போது (10 மாதங்கள்) வேலைக்கு பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

★ விண்ணப்ப முடிவுத் திகதி: 28-05-1993.

★ நேர்முகப் பரீட்சைத் திகதி: 29-05-1993.

விண்ணப்பங்கள் யாவும்;

பதிவாளர்,
பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்,
இல. 59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்,
என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

## பின்வரும் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 22-05-1993இல் ஆரம்பமாகின்றன.

### Computer Courses:

★ d Base III Plus and MS - DOS
Duration 4 Months

★ Lotus 1 - 2 - 3 (Spread Sheet Analysis and MS — DOS)
Duration: 4 Months

SHORTHAND AND TYPING (English)
சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்)

CITY and GUILDS OF LONDON EXAMINATION (YEAR 93/94)
(1) Quantity Surveying
(2) Electrical Electronic Engineering Technician.

மேலதிக விபரங்கட்கு;

REGISTRAR,
Patrician Institutes,
59, St. Patrick's Road,
Jaffna.

பதிவாளர்,
பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனம்,
இல. 59, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(A 3129)

# கடமை தவறும் பொலிஸார் கடுமையாக தண்டிக்கப்படுவர்

## ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்களை ஒழுங்காக நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சுதந்திரமான, சாதாரண முறையில் இந்தத் தேர்தல்களை நடாத்துவதற்கு பங்களிப்பு செய்யுமாறு பொலிசாருக்கு மேலும் பல ஆலோசனைகளை கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களையும் அதிகாரிகளையும் மிரட்டுபவர்கள் அல்லது தாக்குதல் நடத்துபவர்கள் மீது கடுமையாக நடந்துகொள்ளும்படியும் கேட்டுள்ளார்.

பொலிசார் தமது கடமைகளில் இருந்து தப்புச் செய்தால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சட்டத்துக்கு புறம்பாக நடந்துகொள்பவர்கள் மீதும் தயவு தாட்சணியமின்றி தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பொலிசாரை பணித்திருக்கின்றார்.

எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிராக தெரிவித்த குற்றச்சாட்டுகளின் பின்பே ஜனாதிபதி விஜயதுங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசு தரப்பு அபேட்சகர்களுக்கு பொலிஸ் நிலையங்களில் ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்று சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி விஜயதுங்கவுக்கு கடிதமும் எழுதியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சு-கி)

# தனியார் வானொலிநிலையம் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையின் முதலாவது தனியார் வானொலி ஒலிபரப்புச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'டி. என் எல்.' என்ற பெயருடன் ஆரம்பிக்கும் இந்தச் சேவை டெலிகாம் எட்வேட் பிறைவேட் லிமிட்டெட் என்ற நிறுவனமே பிலியந்தலையில் உள்ள பொல்கொடையில் ஆரம்பிக்கவுள்ளதாம்.

பரீட்சார்த்த முறையில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஒலிபரப்புச் சேவை 101 . 7 என்ற அலைவரிசையில் எவ்.எம். மீற்றரில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (சு-கி)

# துப்பாக்கி முனையில் வரிப்பணம் கொள்ளை

(வவுனியா)

வவுனியா நகரசபைக்காரியாலயத்துக்கு செலுத்துவதற்கென்று கொண்டுவரப்பட்ட சினிமாத் தியேட்டர் ஒன்றின் வரிப்பணமான 99,000 ரூபா இனந்தெரியாத நபரொருவரால் ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கொள்ளைச் சம்பவம் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப்பிரதேசத்தில் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (சு-கி)

# பாக். விமான சேவையை அமெரிக்கா தடைசெய்யும்?

(நியூயோர்க்)

பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனம் சட்டவிரோதமாக போதைவஸ்து கடத்தலில் ஈடுபட்டுவருவதாக அமெரிக்கா கடுமையாக குற்றம்சாட்டியுள்ளது.

இதனையடுத்து பாகிஸ்தானைச் சேர்ந்த விமானங்கள் அமெரிக்கா வருவதை தடைசெய்யப்போவதாக அமெரிக்க ராஜாங்க திணைக்களம் பாகிஸ்தானை எச்சரித்துள்ளது.

பாகிஸ்தான் விமானங்கள் மூலம் பெருமளவு போதைப்பொருட்கள் உலக நாடுகளிற்கு கடத்தப்படுவதாகவும் அமெரிக்கா மேலும் குற்றம்சாட்டியுள்ளது.

இதேவேளை பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிக்கப்போவதாகவும் அமெரிக்கா எச்சரித்துள்ளதும் தெரிந்ததே. (சு-கி)

## மாகாண சபைக்கு ஆதரவு

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களுக்கு மாகாண சபை இடைப்பரப்பை நவசமசமாஜக் கட்சி ஒருபோதும் எதிர்க்கவில்லை என்று வாசுதேவநாணயக்கார கூறியுள்ளார்.

வடக்கு-கிழக்கு இணைப்பை நவசமசமாஜக்கட்சி ஆதரித்து வருவதும் தெரிந்ததே. (சு-கி)

## பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கிளாலி அல்லிப்பளை பகுதியில் நேற்று முன்தினம் சரமாரியாக விமானத் தாக்குதலின் பின்புலம் கடற்படையினர் பலத்த பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

காலை 10-30 மணியளவில் கிளாலி நடுக்கடல் பகுதியில் தரித்து நின்ற கடற்படை பீரங்கிப் படகிலிருந்து சரமாரியாக கரையை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின் சேதவிபரங்கள் தெரியவரவில்லை. (170-வி-இ)

# எரிபொருள் கடத்த முயன்ற பதினொரு பேர் கைது

(சென்னை)

வட-இலங்கைக்கு 11 லட்சம் ரூபா பெறுமதியான எரிபொருட்களைக் கடத்த முயன்ற 11 பேர் காயிதே மில்லத் மாவட்டத்தில் கைதாகியுள்ளனர்

இவர்களில் 8 பேர் இலங்கையர்கள் என்றும் ஏனைய மூவரும் தமிழ்நாட்டுக் கடத்தல் காரர்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல கொள்கலன்களில் டீசல், பெற்றோல், மற்றும் ஏனைய பொருட்களுடன் வட பகுதிக்கு படகுகளில் கடத்த முயன்றபோது கிடைத்த தகவலை அடுத்து பொலிசார் இவர்களைக் கைது செய்தனர். (மே)

## சோதிட ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை நான்கு மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும். இன்றைய ஆய்வரங்கில் பட்டயக் கணக்காளர் கே. சி. இராமநாதன் ''சோதிடம் அறிமுகம்'' என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்குவார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். (எஸ்)

# ஜெனரேட்டர் பழுதடைந்தது ஆஸ்பத்திரி மின்சார விநியோகம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பொது வைத்திய சாலை மின்சாரப் பிரிவில் இயங்கி வந்த 85 கே. வி. மின் ஜெனரேட்டர் இயந்திரம் நேற்று பழுதடைந்தமையினால் நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரிக்கு மின்சார விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டளவில் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது 85 கே வி. ஜெனரேட்டர் இயந்திரம் அடிக்கடி பழுதடைந்து வருவதனால் 4 லீற்றர் டீசல் வீண் விரயமாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

35 கே. வி. 15 மின் ஜெனரேட்டர்களே தற்போது ஆஸ்பத்திரிக்கு வருகின்றன.

சத்திரசிகிச்சைக்கூடம், பிரவசப் பகுதி, அதிதீவிர, சிகிச்சைப் பகுதிகள், இரத்த வங்கி ஆகியவற்றிற்கு மட்டுமே மின்சாரம் வழங்க வேண்டிய நிலை தற்போது உள்ளது.

85 கே வி. ஜெனரேட்டர் பழுதடைந்தமையினால் எக்ஸ்ரேப் பகுதியும் இயங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. (56-இ)

## பட்டதாரிகளுக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

அரசாங்க சேவையில் பணிபுரியும் பட்டதாரிகளுக்கு பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளன,

விரிவுரையாளர்களாகவும் அதனோடு இணைந்த சேவைகளிலும் அரச சேவையில் பணிபுரியும் பட்டதாரிகட்கு பதவிஉயர்வு பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. [கே]

## ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் இருவர் காயப்பட்டு யாழ் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களான டபிள்யூ பி. பெர்னாண்டோ (73 வயது) எஸ் தவச்செல்வன் [18 வயது] ஆகியோரே பலத்த காயத்திற்குள்ளாகி நேற்றுமுன்தினம் காலை இங்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். [56-இ]

# ஆப்கான் சண்டையில் 1200 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற கடும் சண்டையில் 1200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகியதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இரு போட்டிக் குழுக்கள் இடையே நடைபெற்றுவரும் கடும் சண்டையிலேயே கடந்த இரு நாட்களில் இவ்வளவு பொதுமக்களும் பலியாகியுள்ளதாகவும், காபூல் தெற்குப் பகுதியிலுள்ள மருத்துவ மனை ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதலில் பல நோயாளர்கள் பலியாகிவிட்டதாகவும் செஞ்சிலுவைச் சங்கம் மேலும் அறிவித்துள்ளது. (வி-சி)

# தடை விலக்கப்பட்டதால் ராஜீவ் கொலையுண்டார்

(டில்லி)

ராஜீவ் காந்திக்கு கொடுக்கப்பட்டிருந்த சிறப்புப் பாதுகாப்புப்படை விலக்கிக் கொள்ளப்படாது இருந்திருந்தால் அவர் கொலைப்பட்டிருக்கமாட்டார் என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் மணி சங்கர் ஐயர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் வர்மா கமிஷன் அறிக்கைமீது நடந்த விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து கூறியதாவது: வி பி சிங் அரசு அரசியலைப் புகுத்தி ராஜீவ் காந்திக்கு தேவையான பாதுகாப்பை அளிக்கவில்லை. இதனால் வி. பி.சிங், சந்திரசேகர், உள்துறை அதிகாரிகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? சிறப்புப் பாதுகாப்புப் படையை விலக்கிக்கொண்டதே ராஜீவ் காந்தி கொலையுண்டதற்கு அடிப்படைக் காரணமாகும் என்றார். (சு-கி)

## இலங்கையர் தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை யாழ் பிரிவுத்தலைவர் கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் ஞேபல் சாட்டர் பெற்றதும் மகாராணியைத் தலைவராகக் கொண்ட பிரித்தானிய சமூக சேவை ஸ்தாபனத்தின் (BASW) மத்திய சபையில் வாக்களிக்கத் தகுதியுடைய முழு உறுப்பினராக அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

பிரித்தானிய பிரபுக்கள் சபை உறுப்பினர்களையும், பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட ஸ்தாபனத்தில் இதுவே முதன் முறை ஓர் இலங்கையர் வாக்குரிமையுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜனாதிபதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது

கடந்தமார்ச் மாதம் பிரேமதாசா கதிர்காமம் சென்றிருந்த சமயம் சந்தேக நபர் வீரகுமாரும் அவருடன் சென்றிருந்தாராம்

இந்தச் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தனியாகஒரு ஹெலிகொப்டரிலும் அவரது உதவியாளர் மொஹிதீனும் வீரகுமாரும் மற்றும் அதிகாரிகளும் வேறொரு ஹெலிகொப்டரில் சென்றனர்.

அன்றைதினம் பிரேமதாசா பயணம் செய்த ஹெலிகொப்டரில் பயணம் செய்வதற்கு வீரகுமாருக்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் பிரேமதாசாவின் படுகொலை அப்போது நடைபெற்றிருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

### தப்பியோடிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து கைதுசெய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

கைதுசெய்யப்பட்டவர்களை மீண்டும் இராணுவத்தில் சேர்க்கும் வகையில் அவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வி]

### கட்டைக்காடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டவண்ணமிருந்தன. அதேநேரம் வெற்றிலைக்கேணி ஆனையிறவு இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் விமானம், ஹெலிகொப்டர்கள் பலமுறை வட்டமிட்டதையும் அவதானிக்க முடிந்தது.

நேற்று இரவும் முகாமை அண்டிய பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் இடைக்கிடை கேட்ட வண்ணமிருந்தன. (163-வி)

### கிட்டுவுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடற்படை மட்டுமல்ல எந்த மாநில அரசும் தமது விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வரவில்லை என்றும் மத்திய புலனாய்வுத் துறையினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதன் காரணமாக இந்த ஒன்பதுபேர் மீதும் வழக்குத் தாக்கல் செய்வதற்கு காலதாமதமாகின்றது என்றும் புலனாய்வுத்துறையினர் தெரிவித்தனர்.

எம். வி அஹத்கப்பலின் கப்டன் ஜெயச்சந்திரன் மட்டும் சி. பி ஐ. பொலிஸ் காவலிலும் ஏனைய எட்டுப் பேரும் நீதிமன்றக் காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் தொடர்புள்ள ஆவணங்களையும் கடற்படை அதிகாரிகள் தம்மிடம் ஒப்படைக்கவில்லையென்றும் சி. பி. ஐ. தெரிவித்தது. (வி)

### இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் உதவி வழங்கப்போவதாக ஜப்பான் இலங்கை அரசிடம் உறுதியளித்துள்ளது.

உதவி வழங்கும் நாடுகளில் ஜப்பான் மட்டும் இலங்கைக்கு கூடுதல் உதவி வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

பல அபிவிருத்தித் திட்டங்கள் ஜப்பான் உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது. (வி)

# யாழ். புனர்வாழ்வு பணிக்கு நிதி ஒதுக்க அரசு பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு திட்டத்திற்கு பணம் ஒதுக்குவதற்கு அரசு பின்னடித்துவருவதாகத் தெரியவருகிறது.

1993-ம் ஆண்டு யாழ். மாவட்ட அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்காக 138 மில்லியன் ரூபாவிற்கான வேலைத்திட்ட அறிக்கை கடந்த வருட இறுதியில் யாழ். செயலகத்தில் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இவ்வருடம் ஆரம்பித்து ஐந்து மாதங்களாகியும் மேற்படி அமைச்சு புனர்வாழ்வு திட்டத்துக்கான நிதி எதனையும் இது வரையும் ஒதுக்கீடு செய்யவில்லையாம். இதனால் புனர்வாழ்வு திட்டவேலைகளுக்கென யாழ். மாநகர சபையினால் விசேடமாக நியமிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தமதுவேலைகளை இழக்கும் நிலையிலிருப்பதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வி-வி)

## பொதுக்கூட்டங்கள் ஊர்வலங்களுக்கு தடை

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்து ஒருவாரகாலத்துக்கு பொதுக்கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவிலிருந்து தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டு ஒருவாரம் கழியும் வரை எந்த ஒரு நிர்வாக மாவட்டத்திலும் பொதுக்கூட்டங்கள் நடாத்தமுடியாதென பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார். (இ)

## மாகாணசபைத் தேர்தல்: 1056 நிலையங்களில் வாக்குகள் எண்ணப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 17-ந் திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலின் வாக்குகள் 17 மாவட்டங்களில் 1056 நிலையங்களில் எண்ணப்படுமென தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி. சில்வா தெரிவித்தார்.

பத்தாயிரம் வாக்காளர்களுக்கு ஒரு வாக்கு எண்ணும் நிலையம் என்ற அடிப்படையில் வாக்குகள் எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களிலும் வாக்குகள் இரு பிரிவாக எண்ணப்படும்.

ஒரு பிரிவில் தபால் வாக்குகளும், மற்றைய பிரிவில் வாக்குப்பெட்டிகளில் இடப்பட்ட வாக்குகளும் எண்ணப்படும்.

தேர்தல் முடிவுகள் 18-ந் திகதி அதிகாலை 2-30 மணி முதல் வெளியிடப்படுமென தேர்தல் ஆணையாளர் மேலும் அறிவித்துள்ளார். (வி)

## கொடிதினம்

(யாழ்ப்பாணம்)

இந்து இளைஞர் கொடிதினமும் இன்று காலை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை குருமகா சன்னிதானம் ஆசிரியுரை வழங்கி கொடி தினத்தை ஆரம்பித்து வைப்பார்.

## பெண் தாதிகள் நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

நேற்றைய பத்திரிகையில் வெளிவந்த இன்று நடைபெற இருந்த வன்னி மாவட்டத்தில் பணிபுரிய பயிற்சி பெற்ற பெண் தாதிகள் தேவை என்ற நேர்முகத் தேர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் நாளை மறுதினம் 17ம் திகதியன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சை

(கொழும்பு)

எழுதுவினைஞர் சேவையின் அதிசிறப்பு வகுப்பு விசேடப் பரீட்சையும், விஞ்த்திறமைகாண் பரீட்சையும் திட்டமிட்டபடி இம்மாதம் 29-ம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சை நாட்டில் வேறு எந்த ஒரு பகுதிகளிலும் நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 15-ம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் பிலிப் வைத்தியசாலையில் அமைந்துள்ள சங்கப்பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## இந்திய பிரதம நீதியரசர் ராமசாமி ராஜினாமா

(புதுடில்லி)

இந்தியாவின் பிரதம நீதியரசர் திரு. வி. ராமசாமி தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

தற்போதைய நீதிமன்ற தொடர்காலம் முடிவடைந்தவுடன் தான் தொடர்ந்து நீதிமன்றம் செல்லப்போவதில்லை என்று கூறிய நீதிபதி திரு ராமசாமி தமது ராஜினாமாக் கடிதத்தை விரைவில் இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பப் போவதாகவும் அறிவித்துள்ளார். (வி)

## முல்லை. கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

முல்லை மாவட்ட கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரும் [இதுவரை கடமைக்குத் திரும்பாதவர்கள், கடமை ஏற்காதவர்கள்] பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. தணிகாசலம்பிள்ளையை யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்தில் நாளை மறுதினம் 17-ம் திகதி பி. ப. 3 மணிக்கு நேரடியாக சந்திப்பதற்கு தவறாது சமூகமளிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

## உயர்நிலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்த்தக வாணிப அமைச்சின் செயலாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி சுங்கப் பணிப்பாளர் திரு காமினி ராஜபக்ஷா கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலின் பின் அமைச்சர் பதவிகளிலும் மற்றும் உயர் அதிகாரிகள் பதவிகளிலும் பாரிய மாற்றங்கள் நிகழவிருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## அன்னை திரேசா ஆஸ்பத்திரியில் அனுமதி

(ரோம்)

அன்னை திரேசா ரோம் நகரில் கால்வழுக்கி கீழே விழுந்ததில் விலா எலும்புகள் மூன்று முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

82 வயதான அன்னை திரேசா கிறிஸ்தவ சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக இத்தாலியின் தலைநகரான ரோமுக்குச் சென்றிருந்தார்.

## ஐ. ஐ. தே. க.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தியதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

ஆயுதங்களுடன் வாகனமொன்றில் வந்த இந்த கோஷ்டியினர் மாவத்தகம கிராம மக்களை பெரிதும் அச்சுறுத்தியதாக அவர் தெரிவித்தார்.

இவர்கள் இராணுவ சீருடையில் அங்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. (இ)

## தமிழீழ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் மீட்பு நிதிக்கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்பு நிதிக்கடனை செலுத்தமுடியும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

## மாகாணசபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆண்டுகளுக்குமுன் நடைபெற்ற முதலாவது மாகாண சபைத் தேர்தலை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. ஆனால் இம்முறை அவைகள் கலந்து கொள்கின்றன.

தேர்தல்கள் நடைபெறும் 7 மாகாணங்களில் எதிர்க்கட்சிகள் ஆட்சியை கைப்பற்றினால் உள்ளூராட்சிகளை உயர்த்தவும் தற்போதைய ஐ. தே. கட்சியின் பொருளாதாரத் திட்டங்களை தடுக்கவும் எதிர்க்கட்சிகள் உன்னிப்பாக செயல்படுமென்றும், இதனால் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு அடித்தளம் அமைக்கும் வாய்ப்பாகவும் அமைந்துவிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வி)

## ராவை பதவி விலகுமாறு அதிருப்தியாளர் வலியுறுத்து

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவை பதவி விலகுமாறு இந்திரா காங்கிரஸ் கட்சியின் அதிருப்தியாளர் மீண்டும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளார்கள்.

நீதிபதி ராமசாமியை பதவி நீக்கம் செய்வதற்கு ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியினர் மறுப்புத் தெரிவித்ததினால் அக்கட்சியின் அதிருப்தியாளர் பிரதமர் நரசிம்மராவை பதவி விலகும்படி மீண்டும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## பாடசாலை சிறுவர் கடத்தல்: 6 குழந்தைகளை கொல்வதாக கடத்தல்காரன் அச்சுறுத்தல்

(பாரிஸ்)

பிரான்ஸின் பாரிஸ் நகரில் நேற்று முன்தினம் சிறுவர் பாடசாலையிலிருந்து கடத்தப்பட்ட சிறுவர்களை விடுதலை செய்வதற்கு கடத்தல்காரன் கோரிய பணயத்தொகையான 54 கோடியை வழங்குவதற்கு பிரான்சு அரசு ஒப்புக்கொண்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

கடத்தல்காரனினால் கடத்தப்பட்ட 21 குழந்தைகளில் 15 குழந்தைகளை கடத்தல்காரன் நேற்றுக் காலை விடுதலை செய்தான்.

மிகுதி 6 குழந்தைகளையும் ஆசிரியையும் விடுதலை செய்ய வேண்டுமானால் தான்கோரிய பணயத்தொகையை உடன் செலுத்த வேண்டுமென்றும், இல்லாவிடில் இவர்களைக் கொலை செய்யப்போதாகவும் அச்சுறுத்தியுள்ளான்.

இதுகுறித்து பிரான்ஸின் அமைச்சரவை அவசரமாகக் கூடி ஆராய்ந்த பின்பு கடத்தல்காரரின் கோரிக்கை பணத்தை வங்கி ஒன்றின் மூலம் செலுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளதாக தெரிவிக்கின்றன. (வி)

## பிரேமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

கடந்த 1992-ம் ஆண்டு பிரேமதாசாவை பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்களிப்பின்போது அவர் லஞ்சம் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கினார் என்றும், 1992-ம் ஆண்டு பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைகளுக்கு பிரேமதாசாவே காரணமென்றும் குற்றம் சாட்டியுள்ளதாகவும் வெளித்தாஸ் மேலும் தெரிவித்தது. (இ-ரி)

## இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்த இந்திய ஜனாதிபதி முன்னாள் இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும், திரு. லலித் அத்துலத்முதலியும் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக தமது இலங்கை விஜயத்தை ரத்துச் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காலஞ்சென்ற இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்திய ஜனாதிபதியை அழைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (வி-ரி)

## கைதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிருலப்பனை பொலிசில் உயிருடன் இருந்ததாக தகவல் கிடைத்துள்ளதென்று ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் எம். ஏ. சில்வாவை சந்தித்து அவர் இந்த விபரத்தை தெரிவித்தார்.

ரகுநாதன் என்ற இளைஞன் சடலம் லலித் அத்துலத்முதலி கொலையுண்ட மறுநாள் காலை கிருலப்பனை, முகலம் வீதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டது.

கனடா செல்வதற்காக இந்த இளைஞர் கனேடிய விசாவை எதிர்பார்த்திருந்தார். விசா கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக இவர் கொழும்பில் தங்கியிருந்தார். அப்போது இவர் கிருலப்பனை பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

இதனைக் கேள்வியுற்ற அவரது தாயார் மனைவியார் பதற்றுக் கிருலப்பனை பொலிஸ் நிலையம் சென்றார் எனவும் சட்டத்தரணி தயா பெரேரா மேலும் தெரிவித்தார். (இ)

## உப்பள ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி உப்பளஊழியரின் சம்பளக் கொடுப்பனவு பட்டியல் கொழும்பு தலைமைக்காரியாலயத்திற்கு அனுப்பிவைத்ததும் மக்கள் வங்கி மூலம் ஊழியர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று லங்கா சோல்ட் லிமிட்டெட் வடபிராந்திய உற்பத்திமுகாமையாளர் திரு. சி. சிறிராமநாதன் அறிவித்துள்ளார்.

முன்னர் வந்த செய்திகளின்படி இவ்வூழியர்களுக்கான சம்பளப் பணமாகவோ காசோலையாகவோ எடுத்துவரப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பிரபாவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக வர்மா கமிஷன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல் செய்வதற்கு அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்தார்.

அரசு இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்கிறது எனவும் ராஜீவ் கொலைக்குப் பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும் அரசு விட்டு வைக்காது அவர்கள் மீது அரசு எப்படியும் நடவடிக்கை எடுத்தே தீரும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். – ரி

## ரூபவாஹினி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாளை ஞாயிற்றுக்கிழமை 16ம் திகதி ரூபவாஹினி மூலம் அரசியல் கட்சித் தலைவர்கள் பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது எனினும் எதிரணியினருக்கு ஒரு சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ரூபவாஹினியில் உரையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம்.

இதுகுறித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில்,

15ம் திகதி நள்ளிரவுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சட்டப்படி பூர்த்தியாகின்றன. நாளை 16ம் திகதி ரூபவாஹினி மூலம் உரையாற்ற எதிரணியினருக்கு அரசு அனுமதியளித்திருப்பது பின்னர் பல சட்ட ஒழுங்குப் பிரச்னைகளை ஏற்படுத்தும் என்றார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தொடர்பாக, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Srilanka under license Number B/10836/N